# தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்

பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.

தலைமை இடம் - சென்னை.

**S.நாகராஜன்** தலைவர் | **K.சந்திரசேகரன்,B.A.,** பொதுச்செயலாளர் | **B.தியாகராஜன், M.Com.,** நிதிச்செயலாளர்

**சுற்றறிக்கை எண்: 20/2018** 31-12-2018

அன்புகெழுமிய சங்க உடன் பிறப்புகளுக்கு பொதுச்செயலாளரின் வணக்கங்களும் வாழ்த்துக்களும். 2018ம் ஆண்டின் இறுதி நாளான இன்று கீழ்கண்ட விபரங்களை இந்த சுற்றறிக்கை வாயிலாக உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரிதும் மகிழ்கின்றேன்.

**இயக்க நடவடிக்கைகள்:-**

கடந்த சுற்றறிக்கை வாயிலாக தெரிவித்திருந்த படி 08-12-2018 அன்று கூடிய நமது சங்கத்தின் உயர்மட்டக்குழுவில் முடிவெடுத்தபடி மத்திய தொழிற்சங்க மையங்களில் இணைந்துள்ள தொழிற்சங்கங்கள் எதிர்வரும் 08-01-2019 மற்றும் 09-01-2019 ஆகிய இரண்டு நாட்களும் நடத்த உள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொள்வதில்லை. போராட்டத்திற்கு தார்மீக ஆதரவு வழங்குவது என்பதைப் பொறுத்தவரை போராட்டத்தில் ஈடுபடும் சங்க உறுப்பினர்கள் நடத்திடும் ஆர்பாட்டத்தில் அலுவலக நேரத்திற்கு முன்போ அல்லது அலுவலக நேரத்திற்கு பின்போ நம்மை கலந்து கொள்ள அழைப்பு விடுத்தால் நடைபெறும் ஆர்பாட்டக் கூட்டத்தில் கலந்து கொண்டு போராட்டத்தில் கலந்து கொள்ளும் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்திட வேண்டுகின்றோம்.

2018-2019ம் ஆண்டிற்கு தேர்தல் நடத்திடாத செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டத்தில் அந்த வட்டத்தின் பொறுப்பாளர்களும் உறுப்பினர்களும் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் மறைமலைநகர் கோட்டச்செயலாளர் திரு.பெரியசாமி அவர்கள் வட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். வட்டச்செயலாளர்கள் இல்லாத தூத்துக்குடி, சிவகங்கை, கரூர், நாகப்பட்டினம். திருவாரூர், கள்ளக்குறிச்சி, சென்னை தெற்கு I, சென்னை தெற்கு II, நீலகிரி ஆகிய வட்டங்களுக்கு வட்ட அமைப்பாளர்களை நியமித்திட உரிய பரிந்துரைகளை அனுப்பிட மண்டலச் செயலாளர்களை வேண்டுகின்றோம்.

2018ம் ஆண்டிற்கு வசூல்செய்யப்பட்ட சந்தாவில் மத்திய சங்கப் பங்குத்தொகையினை இரண்டாம்படிவ இரசீதுகளுடன் மேலும் தாமதமின்றி செலுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிட வட்டச்செயலாளர்களை வேண்டுகின்றோம்.

செய்திமடலைப் பொறுத்தவரை ஆண்டு சந்தா செலுத்திய பலர் 4/2018ற்கு பின் ஆண்டு சந்தாவை செலுத்தாமல் உள்ளனர். 31-01-2019ம் நாளுக்குள் சந்தா செலுத்தாதவர்களுக்கு பிப்ரவரி 2019லிருந்து செய்திமடல் அனுப்புவது நிறுத்தப்படும். எனவே வட்டச்செயலாளர்கள் அவர்களுடைய பகுதியில் செய்தி மடல் சந்தா செலுத்தாவர்களிடமிருந்து ஆண்டு சந்தாவினை வசூல் செய்து அனுப்பிட வேண்டுகின்றோம்.

10-12-2018 தேதிய சுற்றறிக்கையில் கேட்டுக்கொண்டபடி மாதாந்திர சுற்றறிக்கையினை அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்திட அனைத்து வட்டப் பொறுப்பாளர்கள், மத்திய அலுவலகக்கிளை, கோட்டக் கிளைச்செயலாளர்கள், உதவிக்கோட்டச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் வரையிலான பொறுப்பாளர்களின் அஞ்சல் முகவரியினை இதுவரை மத்திய சங்கத்திற்கு அனுப்பி வைக்காத வட்டச் செயலாளர்கள் அவைகளை உடன் அனுப்பிவைத்திட வேண்டுகின்றோம்.

28-10-2018 அன்று நடைபெற்ற மாநிலச்செயற்குழுவில் முன்னாள் நிதிச்செயலாளர் திரு.E.சித்தையன் அவர்களை சங்கத்துணை விதி 20(c) ல் வரையறுத்துள்ளபடி சிறப்பு பணிகளை மேற்கொண்டிட பொதுச்செயலாளருக்கு உறுதுணையாக பணியாற்றிட உதவிப்பொதுச்செயலாளராக நியமனம் செய்ததை சட்டவிரோதமானது என்று கூறி அந்த நியமனத்திற்கு தடைவிதிக்கக்கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் சென்னை மைய வட்டத்தின் அண்ணாசாலை கோட்டத்தின் செயலாளர் திரு.M.மில்டன்பிரிஸ் அவர்கள் வழக்கு

தொடுத்துள்ளார். இந்த வழக்கு கடந்த 19-12-2018 அன்று விசாரணைக்கு வந்தது. நமது தரப்பில் அமைப்புச் செயலாளர் திரு.பா.கோபாலகிருஷ்ணன் அவர்களும், உதவிப் பொதுச்செயலாளர் திரு.E.சித்தையன் அவர்களும் நீதிமன்றம் சென்றிருந்தனர். மனுதாரர் தரப்பில் சங்கத்தின் முன்னாள் சட்டத்துறை செயலாளர் திரு.விஸ்வநாதன் அவர்கள் நீதி மன்றத்திற்கு வந்திருந்தார். வழக்கு எதிர்வரும் 04-01-2019 அன்று மீண்டும் விசாரணைக்கு வருகிறது.

**நமது கோரிக்கைகள்:-**

முதன்மை பட்டியல் அச்சிட்டு வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கை உள்ளிட்ட 9 கோரிக்கைகள் குறித்து சங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்திட வேண்டும் என்று வாரியத் தலைவருக்கு கடித எண்:133/18 நாள் 06-12-2018 வாயிலாக கோரிக்கை வைத்துள்ளோம்.

**வாரிய ஆணைகள் பதவி உயர்வு தொடர்பான செய்திகள்:-**

1. கஜா புயல் சீரமைப்பு பணிகளை மேற்கொண்டிட ஆந்திரா,தெலுங்கானா, கர்நாடகா, நெய்வேலி கார்பரேசன் ஆகிய இடங்களிலிருந்து சென்றுள்ள ஊழியர்களுக்கு நாள் ஒன்றிற்கு ரூ.1000/- செயற்பொறியாளர் அந்தஸ்தில் உள்ள அலுவலர்களுக்கு ரூ.3000/- உதவிப்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர்களுக்கு ரூ.2000மும் உணவு, தங்குமிடம், கைச்செலவுக்கு நாளொன்றுக்கு ரூ.100ம் வழங்கிடவும் 29-11-2018 தேதிய வாரிய ஆணை 119 வாயிலாக உத்திரவுகள் வழங்கப்பட்டுள்ளது.
2. 26.12.2018 தேதியிட்ட வாரிய ஆணை 121ன் வாயிலாக 2000 மின்பாதை ஆய்வாளர் பொறுப்புகள் அனுமதிக்கப்பட்டுள்ளது.
3. 40 கணக்கு உதவியாளர்களுக்கு கணக்கு மேற்பார்வையாளர்களாக பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்றுள்ள கடைசிநபர் ஜி.வசந்தி, விழுப்புரம் வட்டம்.
4. 97 கணக்கு மேற்பார்வையாளர்கள் உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கான பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். பட்டியலில் இடம் பெற்றுள்ள கடைசிநபர் பி.கலாராணி, சேலம் வட்டம். பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களுள் 70 நபர்களுக்கு பதவி உயர்வு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்றுள்ள கடைசி நபர் திருமதி.ஜி.விஜயா, கிருஷ்ணகிரி வட்டம்.
5. 75 உதவிகணக்கு அலுவலர்களுக்கு கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்கிட பட்டியல் அனுமதிக்கப்பட்டுள்ளது. பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களுள் 45 நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்றுள்ள கடைசி நபர் திருமதி.டி.செந்தாமரை, சிவகங்கை வட்டம்.
6. 1604 கணக்கீட்டாளர்களுக்கு கணக்கீட்டாய்வாளர் பதவிஉயர்வு வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெறும் கடைசி நபர் திருமதி.ஏ.மகேஸ்வரி, விருதுநகர்.
7. களப்பிரிவில் முகவர் மற்றும் சிறப்பு நிலை முகவர் பொறுப்புகளிலிருந்து 30 நபர்களுக்கு இளநிலைப் பொறியாளர் 2ம் நிலை பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு விருப்ப மாறுதல் கோரி சமர்ப்பித்த விண்ணப்பங்கள் இன்றுடன் காலவதி ஆகின்றது. விருப்பமாறுதல் பெற விரும்புபவர்கள் ஜனவரி மாதத்தில் புதிதாக விண்ணப்பம் சமர்ப்பிக்கவேண்டும்.

சங்க உடன்பிறப்புகள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்கள்.

தோழமையுள்ள,

பொதுச்செயலாளர்.

பெறுநர்: மத்திய சங்கப் பொறுப்பாளர்கள்,
மண்டலச் செயலாளர்கள்,
வட்டச் செயலாளர்கள்.
கோட்டச் செயலாளர்கள் மற்றும் மத்திய அலுவலக கிளைச்செயலாளர்கள்.